018

இலங்கை திறந்த பல்கலைக்கழகம்

கல்விப்பீடம்

விசேட தேவைகள் சார் பட்டமேற் கல்வி டிப்ளோமா நிகழ்ச்சித்திட்டம் - 2022/2023

இறுதிப்பரீட்சை – 2023

**SNP8442/SNP8532– விசேட தேவைகள் சார் கல்வித்தொழில்நுட்பம்**

காலம்: மூன்று (03) மணித்தியாலங்கள்

திகதி:- 10.12.2023 நேரம்: மு.ப. 09.30 - பி.ப 12.30

பகுதி **I** இல் அனைத்து வினாக்களுக்கும் பகுதி **II** மற்றும் பகுதி **III** இல் எவையேனும் தலா இரண்டு (02) வினாக்களுக்கு மாத்திரம் விடையளிக்குக.

## பகுதி – I

**01.**

**i.** “கல்வி தொழில்நுட்பம்”, “கல்வியில் தொழில்நுட்பம்” மற்றும் “தகவல் தொடர்பாடல் தொழில்நுட்பம்” ஆகிய பதங்களை வரைவிலக்கணப்படுத்துக.

**ii.** உடல் சார் குறைபாடுகள் உள்ள மாணவர்களை உள்ளடக்கிய வகுப்பறையில் ஆசிரியர்கள் உதவி தொழில்நுட்பத்தை ஒருங்கிணைக்கக்கூடிய ஐந்து (05) வழிகளை விளக்குக.

**iii.** விசேட கல்வித் தேவைகளைக் கொண்ட பிள்ளைகளுக்கான தனியாள் மையக் கல்வி நிகழ்ச்சித்திட்டங்களை (IEP) உருவாக்குவதில் ஈடுபடக்கூடிய பங்குதாரர்களைப் பட்டியலிடுக.

**iv.** விசேட கல்வித் தேவைகளைக் கொண்ட பிள்ளைகளுக்கு நிரலித்த அல்லது திட்டக் கற்றலின் கல்விசார் முக்கியத்துவத்தைக் குறிப்பிடுக.

**v.** தாராளமயப்படுத்தப்பட்ட மற்றும் மாற்றீட்டுத் தொடர்பாடல் (Augmentative and Alternative Communication) முறைமை என்றால் என்ன என்பதை வரைவிலக்கணப்படுத்துக.

**vi.** விசேட கல்வித் தேவைகளைக் கொண்ட பிள்ளைகளைப் கற்றல் கற்பித்தல் செயன்முறையில் ஊக்கப்படுத்தக்கூடிய குறைந்த பட்சம் ஐந்து (05) உயர் தொழில்நுட்பக் கருவிகளைக் குறிப்படுக.

**vii.** உள்ளடங்கல் வகுப்பறையில் வினைத்திறனான செய்துகாட்டலை மேற்கொள்ளும் போது கருத்தில் கொள்ள வேண்டிய ஐந்து (05) காரணிகளைக் கூறவும்.

**viii.** தற்போதைய சூழ்நிலையில் உள்ளடங்கல் வகுப்பாசிரியிர்கள் நிகழ்நிலை வழி கற்றல் கற்பித்தல் செயல்பாட்டில் தங்கள் திறன்களை மேம்படுத்த வேண்டியதற்கான ஐந்து (05) காரணங்களைக் குறிப்பிடுக.

**(05 x 08 = 40 புள்ளிகள்)**

## பகுதி – II

02.

**i.** விசேட கல்வித் தேவைகளைக் கொண்ட மாணவர்களின் கற்றல் கற்பித்தல் செயல்பாட்டில் தொழில்நுட்பங்களை ஒருங்கிணைக்கும் போது கருத்தில் கொள்ள வேண்டிய காரணிகளை ஆராய்க.

**(07 புள்ளிகள்)**

**ii.** கற்றல் கற்பித்தல் செயல்பாட்டில் தொழில்நுட்பங்களைப் பயன்படுத்தி விசேட தேவைகள் உள்ள குழந்தைகளுக்கு எவ்வாறு வசதியளிக்கலாம் என்பதை எடுத்துக்காட்டுக்கள் மூலம் விளக்குக.

**(08 புள்ளிகள்)**

03.

**i.** விசேட கல்வித் தேவைகளைக் கொண்ட மாணவர்களின் கற்றல் கற்பித்தல் செயல்முறையில் புதிய தொழில்நுட்பங்களை ஒருங்கிணைப்பதில் உள்ளடங்கல் வகுப்பறை ஆசிரியர்களின் பங்கை விளக்குக.

**(07 புள்ளிகள்)**

**ii.** இலங்கைக் கல்வி முறைமையில் விசேட கல்வித் தேவையுடைய பிள்ளைகளுக்குக் கல்வி கற்பிப்பதில் உயர் தொழில்நுட்பங்களைப் பயன்படுத்துவதன் நன்மைகள் மற்றும் தீமைகளை எடுத்துக்காட்டுகளை மேற்கோள் காட்டி விவரிக்குக. **(08 புள்ளிகள்)**

04.

**i.** பிரச்சினை திர்த்தல் முறைசார் முறைகளின் இரண்டு (02) செயல்முறைகளை விவரிக்குக.

**(06 புள்ளிகள்)**

**ii.** உள்ளடங்கல் வகுப்பறையில் கற்பித்தல் நுட்பங்களின் ஆதரவுடன் பிரச்சினை திர்த்தல் கற்பித்தல் முறையை எவ்வாறு திறம்படப் பயன்படுத்தலாம் என்பதை எடுத்துக்காட்டுக்களை மேற்கோள் காட்டி விளக்குக. **(09 புள்ளிகள்)**

05.

**i.** இலங்கையில் நிகழ்நிலைத்தளங்களைப் பயன்படுத்தி கற்றல் கற்பித்தல் செயல்பாட்டில் விசேட கல்வித் தேவைகளைக் கொண்ட மாணவர்கள் மற்றும் கற்பிக்கும் ஆசிரியர்கள் எதிர்கொள்ளும் சவால்கள் யாவை?

**(07 புள்ளிகள்)**

**ii.** மேற்கூறிய சவால்களை வெற்றிகொள்வதில் பங்குதாரர்களின் பங்களிப்பை இலங்கையின் கல்வி முறைமையை அடிப்படையாகக் கொண்டு எடுத்துக்காட்டுக்களை மேற்கோள் காட்டி விளக்குக.

**(08 புள்ளிகள்)**

## பகுதி - III

06.

**i.** நீங்கள் கற்பிக்கும் பாடத்திலிருந்து ஏதாவது ஒரு உப அலகை ஏதாவதொரு வகுப்பிற்குக் கற்பிக்கத் தேர்ந்தெடுக்கவும். உங்கள் வகுப்பறையில் மாணவர்களின் பல்வகைமைத் தேவைகளின் அடிப்படையில் நடத்தை வடிவில் மூன்று (03) குறிப்பான கற்றல் குறிக்கோள்களை உருவாக்குக.

(07 புள்ளிகள்)

**ii.** பாடத் திட்டத்தை அமுல்படுத்தும் பொழுது பின்வரும் செயல்பாடுகளில் மேலே குறிப்பிட்ட நோக்கங்களை அடைய நீங்கள் என்ன உத்திகளைப் பயன்படுத்துவீர்கள்.

- கற்பித்தல் முறைகள்
- கற்பித்தல் நுட்பங்கள்
- ஆசிரியரின் செயல்பாடுகள்
- மாணவர்களின் செயல்பாடுகள் (08 புள்ளிகள்)

07.

**i.** விசேட கல்வித் தேவைகளைக் கொண்ட மாணவர்களின் பல்வகைமைத் தேவைகளை விலாசப்படுத்தும் போது கற்றல் சாதனங்களைப் பயன்படுத்துவதன் முக்கியத்துவத்தை விளக்குக.

(06 புள்ளிகள்)

ii. உள்ளடங்கல் வகுப்பறைக்கான கற்பித்தல் சாதனங்களைத் தயாரிக்கும் போதும் பயன்படுத்தும் போதும் கருத்தில் கொள்ள வேண்டிய முக்கிய விடயங்கள் யாவை?

(09 புள்ளிகள்)

08.

i. விசேட கல்வித் தேவைகளைக் கொண்ட மாணவர்களுக்கான கற்பித்தல் செயல்பாட்டில் வரைவியல் ஒழுங்கமைப்பின் (Graphic Organizers) நன்மைகளை ஆராய்க. (07 புள்ளிகள்)

ii. விசேட கல்வித் தேவைகளைக் கொண்ட பிள்ளைகளின் நினைவாற்றலை விருத்தியாக்க ஆசிரியர்கள் எவ்வாறு பட அட்டைகளைப் (Flashcards) பயன்படுத்தலாம் என்பதை ஆராயுங்கள்.

(08 புள்ளிகள்)

09.

i. உங்கள் வகுப்பறையில் விசேட கல்வித் தேவைகளைக் கொண்ட மாணவர்களின் மனவெழுச்சிசார் பிரச்சினைகளைக் கட்டுப்படுத்த பாத்திரம் ஏற்று நடித்தல் (Role Play) கற்பித்தல் நுட்பம் எவ்வாறு பயனுள்ளதாக அமையும்?

(07 புள்ளிகள்)

ii. பல்வகைமைத் தேவைகளைக் கொண்ட பிள்ளைகளுக்குக் கற்பித்தல் முறைகள் மற்றும் நுட்பங்கள் கற்றல் சூழலை கற்றலுக்கு மிகவும் உகந்த இடமாக மாற்றும் வழிகளை விளக்குக.

(08 புள்ளிகள்)

*-முழுப்பதிப்புரிமை பெற்றது -*